யாழ்ப்பாணம்

Registered as a Newspaper    பக்கங்கள் 04    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | புரட்டாசி 28 | [14-10-1993] | வியாழக்கிழமை | ஒலி 233

## கொலரா நோயினால் 4 பேர் பலி; 42 பேர் பாதிப்பு

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட யாழ்ப்பாணம், சாவகச்சேரி, மானிப்பாய், கோப்பாய், தெல்லிப்பழை, உடுவில் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் நேற்றுவரை 42 பேர் கொலரா நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார்கள் எனவும் 4 பேர் உயிரிழந்துள்ளார்கள் எனவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை 237 பேர் நேற்றுவரை சிகிச்சை பெற்றுள்ளனர். திறந்த கடைகளில விற்பனையாகும் உணவுப்பண்டங்கள், பழவகைகள், கீரைவகைகள் போன்றவற்றை உண்பதனாலேயே பலர் இந்நோய்க்கு உள்ளாகியதாக தெரிவிக்கப்பட்டது. யாழ். மாநகரசபை சுகாதார சேவைகள் பிரிவில் 125 பேர் கொலரா நோயாளிகள் என [3ஆம் பக்கம் பார்க்க]

# எல்லைகிராமங்களைபாதுகாக்க 15 ஆயிரம் சிங்களப் பொலிசார்

## புலிகள் தாக்கலாமென அச்சமாம்

[கொழும்பு]

**வடக்கு கிழக்கு பகுதி எல்லை சிங்களக் கிராமங்களைப் பாதுகாக்க 15000 விசேட பொலிசார் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டு உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். அப்பகுதிகளிலுள்ள 88 பொலிஸ் நிலையங்களிலும் 266 காவல் அரண்களிலும் இப் பொலிசார் குவிக்கப்பட்டுள்ளனர். இத் தகவலை பொலிஸ் தலைமை அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இக் கிராமங்களை புலிகள் தாக்கலாம் என அச்சம் ஏற்பட்டுள்ளதை அடுத்தே இந் நடவடிக்கை என தெரிவிக்கப்பட்டுள்ளது.**

எல்லைக் கிராமங்களையும், அங்குள்ள அரச அலுவலகங்களையும் புலிகள் தாக்கலாம என்ற அச்சம் காரணமாக இ் பொலிஸ் நிலையங்கள் உசார் படுத்தப்பட்டுள்ளன எனவும் தேவை ஏற்படின் இராணுவத்தினரின் உதவியை பெற்றுக் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது எனவும் அதற்கான அதிகாரங்கள் அப்பகுதிகளிலுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் வடமத்தி, கிழக்கு ஊவா மாகாணங்களிலிருந்து எல்லைக் கிராம பொலிஸ் நிலையங்களுக்கு தேவையான உதவி பெறவும் எல்லைக்

(3ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா கிராமத்திலிருந்து தமிழ் குடும்பம் வெளியேற்றம்

வவுனியாவில் இராணுவத்தின் பிடியில் உள்ள சிறிமாபுரம் கிராமத்தில் குடியிருக்கும் 39 தமிழ் குடும்பங்களையும் வெளியேறுமாறு அதிகாரிகளால் பணிக்கப்பட்டுள்ளனர். டக் இறைம்பைக் குளம் அருலுள்ள சிறிமாபுரம் கிராமத்தில் தங்கியிருந்த இவர்களின் காணியிலேயேபுதிதாக சிங்கள குடியிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

## குண்டு வீச்சு விமானம் தாழப்பறந்து நோட்டம்

(வடமராட்சி)

சிறிலங்கா குண்டுவீச்சு விமானம் ஒன்று வடமராட்சி வடக்கு, கிழக்கு கடற்பரப்பின் மீது நேற்றுக் காலை 6-45 மணியளவில் தாழப் பறந்து நோட்டமிட்டது.

பலாலியிலிருந்து வந்த இவ் விமானம் தொண்டமனாறு தொடக்கம் சுண்டிக்குளம் வரை தாழப்பறந்த நிலையில் சென்றது. அதேசமயம்நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் கடலில் ரோந்துசென்ற கடற்படைப் படகு முனை கரையோரப் பகுதியைநோக்கி கலிபர் தாக்குதலை மேற்கொண்டது.

நேற்று முன்தினம் மாலை 4-45 மணியளவில் வல்லை வெளியில் வந்த குண்டு வீச்சு விமானம் ஒன்று அப்பகுதியில் சாகசங்களைப் புரிந்துகொண்டிருந்தது. மேலெழுவதும், குண்டு வீசுவதுபோல குத்திக் கொண்டு கீழே வருவதும், சமாந்தரமாகப் பறந்து கொண்டு சரிவதுமாக மாறி மாறி பறந்ததை அவதானிக்க முடிந்ததாக வீதியால் சென்றவர்கள் தெரிவித்தனர். (யோ)

## ஜனாதிபதி வேட்பாளராக டி. பி. விஜேதுங்க போட்டி

[கொழும்பு]

''அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஐ. தே. க. வேட்பாளராக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவே போட்டியிடுவார். இதில் வெற்றிபெறக் கூடிய சக்தி அவருக்கு உள்ளது. அவர் தனது ராஜதந்திரத்தையும் உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தியுள்ளார் என ஐ.தே.க. பொதுச் செயலர் சிறிசேனகூரே பத்திரிகைப் பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

''அவருக்கு நிறைவேற்று அதிகாரங்கள் அனைத்தும் உள்ளன. பாராளுமன்றத்தால் அவரை வெளியேற்ற முடியாது'' எனவும்சிறிசேனகூரே அப்பேட்டியில் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை இணைத்து கொள்வது தொடர்பாக நாம் பேசவில்லை. ஒரு அரசியல் கட்சியை கலைத்துவிட முடியுமென காமினி நம்பவில்லை. இது ஒரு தனிநபரின் நடவடிக்கையாக இருக்க முடியாது. அவர் கட்சியைவிட்டு வெளியேறி ஐ.தே.க வுடன் இணைவது என்பது வேறுவிடயம்.

எதிர்வரும் மார்ச் மாதத்

(3ஆம் பக்கம் பார்க்க)

## கரும்புலிகள் அரங்கப்போட்டி ஞாயிறு பரிசளிப்பு

கரும்புலிகள் நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் நடாத்திய அரங்கப் போட்டிகளில் பரிசு பெறுவோர் விபரம் அறிவிக்கபபட்டுள்ளது. இப்பரிசில்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ் மாவட்ட கலை பண்பாட்டுக் கழகச் செயலகத்தில் வழங்கப்படவுள்ளது. நிகழ்வுக்குரிய கலைஞர்கள் குறித்த நேரத்திற்கு வருகைதந்து பரிசில்களைப் பெற்றுச் செல்லுமாறு கலை பண்பாட்டுக் கழகத்தினர்கேட்டுள்ளனர்விபரம் 4-ம் பக்கத்தில் வெளியாகியுள்ளது

## ராணுவ நடவடிக்கையை திசை திருப்ப

## பொலிஸ்நிலையத்தை தாக்க புலிகளின் விசேட படையாம்

(கொழும்பு)

வடபகுதியில் சிறிலங்கா படையினரின் நடவடிக்கைகளைத் திசைதிருப்ப பொலிஸ் நிலையங்கள் மீது தாக்குதல் நடத்த விசேட படையணிகளை விடுதலைப் புலிகள் அனுப்பி வைத்துள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

இது குறித்துச் செய்தி வெளியிட்டுள்ள 'லங்காதீப' பத்திரிகை கந்தளாய், மெதிரிகிரிய, இங்குரக்கொட ஆகிய இடங்களிலுள்ள பொலிஸ்

(3ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணை வீச்சு

(தென்மராட்சி)

கிளாலி கடற்கரையோரம் நோக்கி நேற்று அதிகாலை ஒரு மணியளவில் பூநகரி இராணுவ முகாமிலிருந்து எறிகணைத் தாக்குகல் இடம்பெற்றது. எனினும் சேதம் எதுவும் ஏற்படவில்லை. (86)

## மீனவர் காயம்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறைக் கடற்பகுதியில் நேற்று மீனவர்கள்மீது சிறிலங்கா கடற்படையினர் நடாத்திய தாக்குதலில் மீனவர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

ஆனைக்கோட்டை சாவக்காட்டைச் சேர்ந்த ஆர் சிறி (வயது 23) என்பவரே மேற்படி தாக்குதலில் காயமடைந்துள்ளார்.

## மிதிவெடி அகற்றும் பணியில் தமிழீழ காவல் துறையினர்

(தென்மராட்சி)

சிறிலங்கா இராணுவத்தினரால் கிளாலி, அல்லிப்பளைப் பகுதியில் கடற்கரையோரங்களில் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றி அப்பகுதியை பொதுமக்களின் பாவனைக்கு ஏற்ற வகையில் சீர்செய்யும் பணியில் தமிழீழ காவல் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

(3ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர் மீது தாக்குதல்

## இரு போராளிகள் வீரச்சாவு

# டி. பி. விஜேதுங்க போட்டி

[கொழும்பு]

''அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஐ. தே. க. வேட்பாளராக ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவே போட்டியிடுவார். இதில் வெற்றிபெறக் கூடிய சக்தி அவருக்கு உள்ளது. அவர் தனது ராஜதந்திரத்தையும் உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தியுள்ளார் என ஐ. தே. க. பொதுச் செயலர் சிறிசேனகூரே பத்திரிகைப் பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

''அவருக்கு நிறைவேற்று அதிகாரங்கள் அனைத்தும் உள்ளன. பாராளுமன்றத்தால் அவரை வெளியேற்ற முடியாது'' எனவும்சிறிசேனகூரே அப்பேட்டியில் தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை இணைத்துக் கொள்வது தொடர்பாக நாம் பேசவில்லை. ஒரு அரசியல் கட்சியை கலைத்துவிட முடியுமென காமினி நம்பவில்லை. இது ஒரு தனிநபரின் நடவடிக்கையாக இருக்க முடியாது. அவர் கட்சியைவிட்டு வெளியேறி ஐ.தே.க வுடன் இணைவது என்பது வேறுவிடயம்.

எதிர்வரும் மார்ச் மாதத்

(3ஆம் பக்கம் பார்க்க)

அங்குள்ள அரச ஆலயங்களையும் புலிகள் தாக்கலாம் என்ற அச்சம் காரணமாக இ பொலிஸ் நிலையங்கள் உசார் படுத்தப்பட்டுள்ளன எனவும் ... தினரின் உதவியை பெற்றுக் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது எனவும் அதற்கான அதிகாரங்கள் அப்பகுதிகளிலுள்ள பொலிஸ் அதிகாரி ... எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் வடமத்தி, கிழக்கு ஊவா மாகாணங்களிலிருந்து ... நிலையங்களுக்கு தேவையான உதவி பெறவும் எல்லைக்

(3ஆம் பக்கம் பார்க்க)

# கரும்புலிகள் அரங்கப்போட்டி ஞாயிறு பரிசளிப்பு

கரும்புலிகள் நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் நடாத்திய அரங்கப் போட்டிகளில் பரிசு பெறுவோர் விபரம் அறிவிக்கபபட்டுள்ளது. இப்பரிசில்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுககிழமை காலை 9-00 மணிக்கு யாழ் மாவட்ட கலை பண்பாட்டுக் கழகச் செயலகத்தில் வழங்கப்படவுள்ளது. நிகழ்வுக்குரிய கலைஞர்கள் குறித்த நேரத்திற்கு வருகைதந்து பரிசில்களைப் பெற்றுச் செல்லுமாறு கலை பண்பாட்டுக் கழகத்தினர்கேட்டுள்ளனர்விபரம் 4-ம் பக்கத்தில் வெளியாகியுள்ளது

# இந்திய மீனவர் மீது தாக்குதல் வேண்டுமென்றே நடத்தவில்லை

## அமைச்சர் ஹமீட் விளக்கம்

(கொழும்பு)

கச்சதீவுக் அருகில் நான்கு இந்திய மீனவர்கள் சிறிலங்கா கடற்படையால் கொல்லப்பட்டனர் என்ற இந்திய அரசின் முறைப்பாட்டை ஆராய வெளியுறவு அமைச்சர் ஏ சி எஸ். ஹமீட் கொழும்பிலுள்ள இந்திய தூதுவர் என். தயாளை நேற்று சந்தித்துப் பேசினார்.

சிறிலங்கா கடற்படையின் துப்பாக்கிச் சூடு பற்றி உடனடியாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

விடுதலைப் புலிகள் நாட்டின் பாதுகாப்பற்கு அச்சுறுத்தலாக இருப்பதால் சிறிலங்கா கடற்படை பெரும் சிரமத்தின் மத்தியில் பாக்கு நீரிணையில் தமது கடமைகளை மேற்கொண்டு வருகின்றனர். சிறிலங்கா கடற்படையினர் வேண்டுமென்றே இந்திய மீனவர் மீது தாக்குதல் நடத்தியிருக்க மாட்டார்கள் எனவும் அமைச்சர் ஹமீட் இந்திய தூதுவரிடம் விளக்கினார்

இது போன்ற அசம்பாவிதங்கள் நடைபெறுவதை தடுக்க இரு நாட்டு அரசுகளும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும் என்றும் அவர் இந்திய தூதரிடம் கோரினார்.

இந்திய தூதுவருடனான இச்சந்திப்பின் போது வெளியுறவு செயலர் பேர்னாட் திலகரட்ன, பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க, கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் சமரசேகர ஆகியோரும் அமைச்சர் ஹமிட்டுடன் கலந்து கொண்டனர்.

# வடபகுதி வங்கி சேவை ஓர் இருண்ட கண்டம்

## சர்வதேச குழு கருத்து

(கொழும்பு)

சர்வதேச கணக்காய்வாளர்களின் பார்வையில் இலங்கையின் வங்கி சேவை இருண்ட கண்டமாக காட்சி கொடுக்கிறது.

வடபகுதியில் இயங்கும் அரச வங்கிகள் தமது முழுமையான சேவையை வழங்க முடியாமல் சீர்குலைந்திருக்கிறது. இவ் வங்கிகளின் சீரற்ற சேவைகள் குறித்து கருத்துக் கூறும் போதே இக்குழுவினர் மேற்கண்டவாறு கூறியுள்ளனர்.

இலங்கையில் இயங்கும் அரச வங்கிகளின் சேவை தொடர்பாக ஆராய்வதற்காகவும் கணக்காய்வினை மேற்கொள்வதற்சாகவும் இலங்கைக்கு விஜயம் செய்த சர்வதேச கணக்காய்வாளர் குழுவினரின் பார்வையிலேயே வங்கி சேவையின் தோற்றம் இவ்வாறு தென்படுகிறது.

மேற்படி சர்வதேச கணக்காய்வாளர்கள் தமது விஜயத்தின் போது இங்கு நடைபெற்று வரும் வங்கி சேவை

(4ஆம் பக்கம் பார்க்க)

# இரு போராளிகள் வீரச்சாவு



2-ம் லெப். காந்தன்



2-ம் லெப். கலைவாணன் (நேரு)

முல்லை மாவட்டத்தில் தவறுதலாக இடம் பெற்ற விபத்தொன்றில் விடுதலைப் புலிகள் போராளிகள் இருவர் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த 2 ஆம்லெப்டினன்ட் காந்தன் [திரு[தர்ம குலசிங்கம் பிரதீபன் - மாசார் பளை யாழ்ப்பாணம்] 2 ஆம் லெப்டினன்ட் கலைவாணன்/ நேரு [மகானந்தராசா கோணேஸ்வரன் - கப்பூது கரவெட்டி யாழ்ப்பாணம்] ஆகிய இவ்விரு போராளிகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# வடமேல் மாகாண ஆளுநர் நேற்று இராஜினாமா

(கொழும்பு)

வடமேல் மாகாணசபையின் முன்னைய முதலமைச்சர் நியமனம் சட்டவிரோதமானது என உயர்நீதிமன்ற தீர்ப்பையடுத்து புதிய முதலமைச்சராக ஜி. எம். பிரேமச்சந்திரா முதலமைச்சராக தற்போது பதவி ஏற்றுள்ளதையடுத்து இம்மாகாண ஆளுநர் மொண்டேகு ஜெயவிக்கிரம தமது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

ஜனாதிபதிக்கு இவர் எழுதிய இராஜினாமா கடிதத்தில் தாம் தனிப்பட்ட காரணங்களுக்காகவே இராஜினாமா செய்வதாக குறிப்பிட்டுள்ளார். இவரின் இராஜினாமாவை தொடர்ந்து புதிய ஆளுநராக கருணாசேன கொடிதுவக்கு என்பவர் நேற்று முதல் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். ஜயவர்தனபுர பல்கலைக்கழக உபவேந்தராகவும், ஜப்பான், கொரியா நாடுகளில் முன்பு தூதுவராகவும் கடமையாற்றுவர்.

## ராணுவ நடவடிக்கையை திசை திருப்ப

# பொலிஸ்நிலையத்தை தாக்க புலிகளின் விசேட படையாம்

(கொழும்பு)

வடபகுதியில் சிறிலங்கா படையினரின் நடவடிக்கைகளைத் திசைதிருப்ப பொலிஸ் நிலையங்கள் மீது தாக்குதல் நடத்த விசேட படையணிகளை விடுதலைப் புலிகள் அனுப்பி வைத்துள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

இது குறித்துச் செய்தி வெளியிட்டுள்ள 'லங்காதீப' பத்திரிகை கந்தளாய், மெதிரிகிரிய, இங்குரக்கொட ஆகிய இடங்களிலுள்ள பொலிஸ்

(3ஆம் பக்கம் பார்க்க)

## ...யம்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறைக் கடற்பகுதியில் நேற்று மீனவர்கள்மீது சிறிலங்கா கடற்படையினர் நடாத்திய தாக்குதலில் மீனவர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

ஆனைக்கோட்டை சாவக்காட்டைச் சேர்ந்த ஆர் சிறி (வயது 23) என்பவரே மேற்படி தாக்குதலில் காயமடைந்துள்ளார்.

# மிதிவெடி அகற்றும் பணியில் தமிழீழ காவல் துறையினர்

(தென்மராட்சி)

சிறிலங்கா இராணுவத்தினரால் கிளாலி, அல்லிப்பளைப் பகுதியில் கடற்கரையோரங்களில் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றி அப்பகுதியை பொதுமக்களின் பாவனைக்கு ஏற்ற வகையில் சீர்செய்யும் பணியில் தமிழீழ காவல் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

(3ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்தேவி நடவடிக்கையில் சிங்க அணிக்கு பெரும் சேதம்

(கொழும்பு)

யாழ்தேவி ராணுவ நடவடிக்கையின்போது கொல்லப்பட்ட 120 படையினரில் 80 பேர் சிங்க படைப் பிரிவைச் சேர்ந்தவர்கள் எனவும் படுகாயமடைந்து அனுராதபுரம், கொழும்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருபவர்களிலும் அதிகமானோர் சிங்க படைப் பிரிவைச் சேர்ந்தவர்கள் எனவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. இது சிங்கப் படைப் பிரிவிற்கு இதுவரை காலமும் ஏற்படாத இழப்பு என்றும் அவ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இந் நடவடிக்கையின்போது கொல்லப்பட்ட ஏழு அதிகாரிகளின் பெயர்களும் பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

மேஜர் தீபாவடுகே (7-வது சிங்க படை), கப்டன் எஸ். டி. கடுவபிடிய (7-வது சிங்க படை), கபடன் டபிள்யூ. ஏ என். எஸ். ஜெயதிலக (6-வது கவசவாகன அணி) கப்டன் வீ.என்.சி ஜெயக்கொடி (1-வது சிங்க படை), கப்டன் எவ்.ஜீ.ஆர். த.சில்வா (6 வது அணி), லெப்டினன்ட் டி.பி. ஜயசேகர (1 வது சிங்க படை), லெப். டி. ஆர். முதலிகே (1 வது சிங்க படை) ஆகியோரே இச் சமரில் கொல்லப்பட்டவர்கள் ஆவர்

# யாழ்தேவி தொலைக்காட்சி செய்தி ரூபவாகினி இருட்டடிப்பு

(கொழும்பு)

அண்மையில் வடபகுதியில் நடைபெற்ற யாழ்தேவி நடவடிக்கை குறித்த செய்தி பி பி. ஸி உலக தொலைக்காட்சி சேவையின் செய்தியறிக்கையில் இடம்பெற்ற அன்று அந்த ஒளிபரப்பு திடீரென கொழுமபில் நிறுத்தப் பட்டுவிட்டதாக தெரிவிக்கப் படுகிறது. பி. பி. ஸி. தொலைக்காட்சி செய்தியை மாலையில் ரூபவாஹினி நேரடி அஞ்சல் செய்வது குறிப்பிடத்தக்கது.

சம்பவ தினம் வடபகுதி இராணுவ நடவடிக்கை குறித்த செய்தியை பி பி. ஸி. தொலைக்காட்சி செய்தி வாசிப்பவர் வாசிக்க ஆரம்பித்த சில நொடியில் அந்த ஒளிபரப்பு திடீரென நிறுத்தப்பட்டு விட்டது. இது தொழில் நுட்பக் கோளாறா அல்லது பி. பி. ஸி. மீது ஏற்பட்ட வெறுப்பா என்பது தெரியவில்லை என கொழும்பு தினசரி செய்தி ஒன்று கேள்வி எழுப்பியுள்ளது.

# 3 மாதகால யுத்தத்தில் 7 அதிகாரிகளைகாணவில்லை

## ராணுவ வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

வடபகுதியில் கடந்த மூன்று மாதகால யுத்தத்தின்போது ஏழுபாதுகாப்பு அதிகாரிகளைக் காணவில்லை எனவும் இவர்களை விடுதலைப் புலிகள் கைது செய்து சிறையில் வைத்திருக்கலாம் என தாம் நம்புவதாகவும் வடபகுதி இராணுவ வட்டாரங்கள் 'லங்காதீப' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளன.

பருத்தித்துறை கடல் பகுதியில் டோரா மீதான புலிகளின் தாக்குதலின் போது மூன்று அதிகாரிகளையும் மண்கிண்டிமலை இராணுவ முகாம் தாக்குதலின் போது மூன்றுபேரையும் யாழ்தேவி நடவடிக்கையின் போது ஒருவரையும் காணவில்லை என அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## வரி விளம்பரம்

### நாளை சனி வக்கிரமாற்றம்

25 நாட்களுக்கு மகரத்தில் சஞ்சரித்தபின் மீண்டும் கும்பத்திற்கு 10 11.93 சனி மாற்றம். வியாழ, சனி மாற்றங்கள் ரூ 10/-- எங்கும் விற்பனையாகின்றது. கிருஷ்ணசாமி புத்தகசாலை யாழ்ப்பாணம். ('சத்யா') (6268)

### தவறிவிட்டது

13.10.93 அன்று சுதுமலை அம்மன் கோயிலுக்கு அருகாமையில் குடும்ப அட்டை 2 உள்வரவு பாஸ் 15 படம் திருமணப்பதிவுகொப்பி 20,000/- பணம் அடங்கிய சொப்பிங் பேக்தவறிவிட்டது. எடுத்தவர்கள் கருணையுடன் ஜெகபதி தையலகம் அந்தோனியார் கோவிலடி மானிப்பாயில் ஒப்படைக்கவும். சன்மானம் தரப்படும். (6276)

வடமராட்சியில்

## COLLEGE OF NEPTUNES

ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும்

பொருளியல்
வரதராஜன்

10 1.30 — Day Class
2.30 4 30 — 94
4.30-6.30 — 95

**01.11 93**

G. A. Q.
வகுப்புகள்
ஆரம்பமாகின்றன.

யாழ். பிரபல ஆசிரியர்களால்கற்பிக்கப்படும். பதிவுகள் ஏற்கப்படும்.

(சி-7582)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



படைப்பு
01-08-1946

அழிப்பு
14 10-1988

திதி: 18-10-1993

தேசபக்தன்

### குழந்தைவேலு பிரமானந்தம்

(மாமணி)


ஐயா! நீ மீண்டும்
எம் மிடையே பிறந்துவிடு!
பொல்லாப் போர் முனையில் - இரத்தப்
பேயாறு பாயுதய்யா!
ஐயா பிறந்து விடு
அணைகட்ட வேண்டுமய்யா!

இணுவில். சகோதரர்கள்

(6273)

வட பிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தக சங்கம் அளிக்கும்

## நிதி உதவி கலை நிகழ்ச்சிகள்



**இடம்: சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானம் காலம்: 16.10.93 நேரம்: இரவு 6.00 மணி**

### நிகழ்ச்சிகள்

1. பருத்திநகர் சாண்டோ எம். துரைரெத்தினம் அவர்களினால் நடாத்தப்படும் "வீரதீரச் செயல்கள்" முதல்முறையாக யாழ் நகரில் அரங்கேறவுள்ளது

(அ) நெருப்பு புதைகுழியில் சில மணிநேரம் படுத்திருத்தல்.
(ஆ) இரண்டு உழவு இயந்திரத்தை எதிர் எதிராக ஒரே நேரத்தில் உடலில் ஏற்றுதல்.
(இ) அதிபாரம் கொண்ட லொறியினை மார்பில் ஏற்றுதல்.
(ஈ) ஓடும் வாகனத்தை தொண்டையினால் இழுத்தல்.
(உ) 35கிலோஎடையுள்ளஇரும்புக்குண்டினை 7அடிஉயரத்திலிருந்து வயிற்றில்ஏந்துதல்.
(ஊ) பாரம் கொண்ட கல்லை மார்பின்மேல் வைத்து சம்மட்டியால் அடித்து உடைத்தல்.
(எ) (3''200 ஆணி) அடிக்கப்பட்ட படுக்கை மீது படுக்க வைத்து மார்பு மேலாக பாரம் உடைய உழவு இயந்திரத்தை ஏற்றுதல்.
(ஏ) துரைரெத்தினம் வாயால் மோட்டார் சைக்கிளை தூக்குதல்.

2. மோகன்மாஸ்டர் அவர்களினால் நடாத்தப்படும் கராட்டிவிளையாட்டுக்கள்.
3. கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் அவர்களின் பட்டிமன்றம்
4. கலை பண்பாட்டுக் கழகத்தினால் நடாத்தப்படும் நாடகம்.

### டிக்கெற் கிடைக்குமிடம்:

| | |
|---|---|
| "வெஸ்கோ" | ஆஸ்பத்திரி வீதி, யாழ். |
| "குறிஞ்சி" | திருநெல்வேலி சந்தை |
| "நாதன் மருந்தகம்" | கல்வியங்காடு |
| "தாவடி மெடிக்கல்ஸ்" | கோண்டாவில் |
| "மெடிஇஸ்குயர்ஸ்" | மானிப்பாய் |
| "மெடிப்பிளஸ்" | சங்கானை |
| ஸ்ரீமுருகன் | நெல்லியடி பருத்தித்துறை |
| "அம்பாள் பாமசி" | சாவகச்சேரி |

அனைத்து தமிழீழ வர்த்தகர்களையும், பொது மக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முக்கியகுறிப்பு: யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவிருந்த நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தினால் சென் பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம் சிரமத்துக்கு மன்னிக்கவும்.

நன்றி.

(இ/7583) வ யா ஆ. ம. வ. சங்கம்

## இலக்கிய பயிலரங்கு

தாயகம் சஞ்சிகை நடாத்தும் கலை இலக்கியமும் திறனாய்வுப் போக்குகளும் எனும் பொருள் பற்றிய இலக்கிய பயிலரங்கு பருத்தித்துறை வீதியில் உள்ள எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் 17ஆம் திகதி மாலை நான்கு மணிக்கு நடைபெறும்.

வழமையானகோட்பாடுகள் எனும் பொருளில் கவிஞர் இ. முருகையன் கருத்துரை வழங்குவார்.

## நினைவு கூருகின்றோம்... 1993-10-14

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ் - அரியாலைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-
**செல்வம்** (தியாகராசா பிரகலாதன் - வீடமைப்புத்திட்டம், நாவற்குழி - யாழ்)

யாழ் - கோப்பாயில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-
**லெப். இளங்கோ** (மார்க்கண்டுசோதிலிங்கம் -ஆயிலை - காரைநகர்)

1988ஆம் ஆண்டு யாழ் - வெலிங்டன் சந்தியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப் பற்றாளரான-
**வீ. கதிர்காமநாதன்** (கல்லூரி வீதி - யாழ்)

சுன்னாகத்தில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான-
**கஜன்** [பொன்னையா சிறிதரன் - உடுவில் கிழக்கு, சுன்னாகம் - யாழ்]

1990ஆம் ஆண்டு வேப்பங்குளம் பகுதியில் மிதிவெடி விபத்தில் எரிந்த-
**அசோக்** (கிருஷ்ணபிள்ளை நாகரட்ணம் - சீனன்குடா - திருமலை)

மட்டுநகரில் சிறிலங்காப்படையினரின் நடவடிக்கைகளால் காணாமல் போன இளைஞன் உட்பட நொச்சிமுனை குடியிருப்பைச் சேர்ந்த 02 தமிழர்கள்.

தமிழீழக் கடற்பரப்பில் (பூநகரி - கிரிக்குடா) சென்று கொண்டிருந்த படகு மீது சிறிலங்கா விமானப் படையினர் உலங்குவானூர்தியிலிருந்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட தமிழ்ப்பயணி.

திருநெல்வேலிப் பொதுச்சந்தை, உடுப்பிட்டிச் சந்தி ஆகிய பகுதிகளின் மீது சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப் பட்ட பெண் உட்பட 5 தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு கொழும்பு தெஹிவளையில் சிறிலங்கா காவற்படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் காணாமல் போன தமிழ்ப்பொதுமகன்,

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி, 7592)


## எழினி புடவை வாணிபம்

மங்களகரமாக ஓராண்டினைப் பூர்த்தி செய்யும்

தேசபக்தன்

## குழந்தைவேலு பிரமானந்தம்

(மாமணி)

ஐயா! நீ மீண்டும்
எம் மிடையே பிறந்துவிடு!
பொல்லாப் போர் முனையில் - இரத்தப்
பேயாறு பாயுதய்யா!
ஐயா பிறந்து விடு
அணைகட்ட வேண்டுமய்யா!

இணுவில். சகோதரர்கள்

(6273)

''தாவடி மெடிக்கல்ஸ்'' — கோண்டாவில்
''மெடிஇஸ்குயர்ஸ்'' — மானிப்பாய்
''மெடிப்பிளஸ்'' — சங்கானை
ஸ்ரீமுருகன் — நெல்லியடி பருத்தித்துறை
''அம்பாள் பாமசி'' — சாவகச்சேரி

அனைத்து தமிழீழ வர்த்தகர்களையும், பொது மக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முக்கியகுறிப்பு: யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவிருந்த நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தினால் சென் பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம் சிரமத்துக்கு மன்னிக்கவும்.

நன்றி.

(இ/7533)

வ யா ஆ. ம. வ. சங்கம்

ஆகிய பகுதிகளின் மீது சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப் பட்ட பெண் உட்பட 5 தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு கொழும்பு தெகி வ ளை யில் சிறிலங்கா காவற்படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் காணாமல் போன தமிழ்ப்பொதுமகன்,

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள்

(இ,7592)



# எழினி புடவை வாணிபம்

மங்களகரமாக ஓராண்டினைப் பூர்த்தி செய்யும்

## எழினி புடவை வாணிபத்தினர்

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவர்க்கும்
மனமார்ந்த நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றார்கள்.

* சின்னஞ் சிறார்களின் இங்கார அழகு மேனிக்கேற்ற அழகு றெடிமேட் ஆடைகள்
* இளம் நங்கையரின் மனதைக் கவரும் நாளுக்கு நாள் மாறும் புதிய டிசைன் சாறி வகைகள்
* ஆடவர்களுக்கான சேர்ட்டிங், சூட்டிங்
* பட்டுவேட்டி, சால்வைகள்
* நவீன டிசையின்களில் அமைந்த தைக்கப்பட்ட ஆடைகள்



இன்னும் பல பல! சிறந்த ரகம்! குறைந்த விலை! நிறைந்த சேவை!

என்றும் எவரும் விரும்பி நாடுவது

# எழினி புடவை வாணிபம்

பெரிய கடை, யாழ்ப்பாணம்.

ஓராண்டினை நிறைவு செய்து ஈராம் ஆண்டில் கால் பதிக்கும் எழினி புடவை வாணிபத்தை மனமார வாழ்த்துகின்றோம்.

சேரன் பல்பொருள் வாணிபம்
அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

சேரன் பல்பொருள் வாணிபம்
பிரதான வீதி, நெல்லியடி.

விக்டர் இயந்திர உதிரிப்பாக வாணிபம்
அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணன் விற்பனை நிலையம்
அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

(சி-7596)

நல்லூர் இன நூலகம்
மாநகர சபை மன்றம்
யாழ்ப்பாணம் 14-10-1993



### சிந்தனைக்கு

தீய ஒழுக்கம் இன்பத்திலும் நம்மைக் கொட்டும்
நல்லொழுக்கம் துன்பத்திலும நமக்கு ஆறுதல் ஊட்டும்

-சார்லஸ் கோல்டன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 14-10-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் - 05

## நீதி வழங்கிய பலத்த அடி

'ஒப்பரேசன் யாழ்தேவி' தோல்வி கொடுத்த அதிர்ச்சியில் இருந்து டி. பி. விஜேதுங்காவின் அரசாங்கம் மீளும் முன்னரே, மேல் முறையீட்டு நீதிமன்றம் மேலும் ஓர் இடியை அதன் மீது போட்டுள்ளது. வடமேல் மாகாண சபைக்கும், தென் மாகாண சபைக்கும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் முதலமைச்சர்களாக நியமிக்கப் பட்டது சட்டவிரோதமானது என்பதே இவ் இரண்டாவது பேரிடியாகும்.

வடமேல் மாகாண சபையிலும், தென் மாகாண சபையிலும், ஐக்கிய தேசியக் கட்சி அறுதிப் பெரும் பான்மையைப் பெறத் தவறியபோதும், ஆளுநர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினரையே ஆட்சி அமைக்க அழைத்தனர். எதிர்த் தரப்பினர், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் கூட்டாக ஆட்சி அமைக்க, அதாவது, பெரும்பான்மை பலத்துடன் தம்மால் ஆட்சி அமைக்க முடியும் என நிரூபிக்கத் தயாராக இருந்தபோதும் அதனை ஆளுநர்கள் பொருட்படுத்தவில்லை. சிறிலங்கா ஜனாதிபதியோ, ''மாகாண சபைக்கு ஆட்சி அமைப்பதற்கு யாரை அழைப்பது என்பது ஆளுநரைப் பொறுத்த விடயம்'' எனக் கூறி நழுவி விட்டார்.

ஆனால், இது ஒரு ''ஜனநாயக பாரம்பரியத்திற்கு' முரணான செயல் என அப்பொழுதே விமர்சிக்கப்பட்டது. சபையில், பெரும்பான்மை பலம் உள்ளவர்களை ஆட்சி அமைக்குமாறு ஆளுநர்கள் அழைக்காமை ஆளுநர்களின் தவறான போக்கைக் காட்டுவதாகவும், அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் ஏஜென்டுகளாகச் செயற்படுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டது.

இவ்வாறாக, ஆளுநர்களும், ஐக்கிய தேசியக் கட்சியினரும் 'ஜனநாயகப் பாரம்பரியம்' என்றால் என்ன? என்ற நிலையை உருவாக்கினர். ஐ. தே. கட்சியைப்பொறுத்துமேல் மகாணம் உட்பட மூன்று மாகாணங்களையும் இழப்பதென்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதொன்றல்ல. ஏனெனில், இலங்கையில் உள்ள 96 லட்சம் வாக்காளர்களில் 56 லட்சம் வாக்காளர்கள் - சுமார் 58 வீதம் - இம் மூன்று மாகாணத்திலுமே உள்ளனர். ஆகையினால், இம்மாகாணங்கள் எதிர்கால தேர்தல்களில் கணிசமான தாக்கத்தை விளைவிக்கக் கூடும். அத்தோடு, இம் மூன்று மாகாணங்களுமே சிங்களவர் அதிகம் செறிந்து வாழும் மாகாணங்களும்' ஆகும்.

# துப்பாக்கிகள் முழங்கும் வரை மரண அறிவித்தலும் நீளும்

### ஐலண்டின் அறிவிப்பு

(கொழும்பு)

துப்பாக்கிகள் தொடர்ந்து முழங்கிக்கொண்டு இருக்கும் வரையில் எமது பத்திரிகையில் மரண அறிவித்தல்கள் நீண்டு கொண்டே செல்லும். இது ஒரு பரம்பரையின் சமாதியாகி வருகிறது. இவ்வாறு ஐலண்ட் பத்திரிகை தனது ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது. யாழ்தேவி இராணுவ நடவடிக்கையில் பலியான படையினரின் மரண அறிவித்தல்கள் பத்திரிகையில் பெரியஅளவில் வந்ததையிட்டு கருத்து தெரிவிக்கையிலேயே ஐலண்ட் ஆசிரிய தலையங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது. அதில் மேலும்,

''ஆங்கில, சிங்களப் பத்திரிகைகளில் போர் முனையில் பலியான படையினரின் மரணப் பட்டியல்கள் அதிகளவில் பிரசுரமாகியுள்ளன. மேஜர், கப்டன் தரத்திலான படையினரின் அறிவித்தல்கள் ஆங்கில தினசரிகளிலும் கோப்ரல்கள், சார் ஜண்டுகளின் அறிவித்தல்கள் சிங்கள தினசரிகளிலும் வெளியாகியுள்ளன. யாராக இருந்தாலும் இப்போரில் படையின் இழப்புகள் நூறுக்குமேல் ஆகும். கைப்பற்றிய இடத்தை மீண்டும் கைவிட்டு செல்லும்போது இந்த உயிரிழப்புகள் வீணானவையாகின்றன என்றும் ஐலண்ட் ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## காமினி பொன்சேகா மீதான ஒழுங்கு விசாரணையில் புதிய சிக்கல்

(கொழும்பு)

உபசபாநாயகர் காமினி பொன்சேகா மீது ஐ. தே. க. மேற்கொண்டுள்ள ஒழுங்குநடவடிக்கை விசாரணை புது வடிவம் பெற்றுள்ளது.

பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட தனிநபர் பிரேரணை ஒன்றின் மீதான வாக்கெடுப்பில் கட்சித் தீர்மானத்திற்கு புறம்பாக காமினி பொன்சேகா வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை என்பதும், அதைத் தொடர்ந்து அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது பற்றி ஆராயப் பட்டதும் தெரிந்ததே. இவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதுபற்றி ஆராய பெஸ்டஸ் பெரேரா தலைமையில், போல்பேரேரா. ஜோன் அமரதுங்க ஆகியோரைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டது.

இந்தஒழுங்கு நடவடிக்கைக் குழு மேற்கொள்ளும் விசாரணைகளில் தனது சார்பாக சட்டத்தரணி ஒருவரை அழைத்துச் செல்ல காமினி பொன்சேகா முற்பட்டார். ஆனாலும் சாட்சியமாக எவரையும் அழைத்துச் செல்லலாம் எனக் கூறிய ஒழுங்கு நடவடிக்கைக் குழு சட்டத்தரணி ஒருவர் விசாரணையில் பங்கேற்பதற்கு தடை விதித்தது. இதனை ஒரு அடிப்படை உரிமை மீறல் என்று வர்ணித்த காமினி பொன்சேகா, ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் விசாரணைகள் கேள்வி - பதில் வடிவத்தில் பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் கோரியுள்ளார்

அத்துடன், கட்சியிலிருந்து குற்றப் பத்திரம் எதுவும் தன்னிடம் தரப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

## தடை செய்யப்பட்டபொருள் ஏற்றிவந்த லொறி தடுப்பு

(கொழும்பு)

பென்டோச் பற்றறிகள் மற்றும் இரும்புப் பொருள்கள் ஏற்றிவந்ததாகக் கூறப்படும் லொறி ஒன்று வவுனியா தாண்டிக்குளம் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற இச்சம்பவத்தில் லொறியில் இருந்த சாரதியும் உதவியாளரும் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

### மனித முன்னேற்ற நடுநிலையம்

## இடம்பெயர்ந்தோருக்கு ஒருவார உலர் உணவு

(குருநகர்)

சிறீலங்கா இராணுவத்தினர் கடந்த மாத இறுதியில் மேற்கொண்டயாழ்தேவிஇராணுவ நடவடிக்கைகளால் தென்மராட்சிப் பகுதியில் இடம் பெயர்ந்து மிருசுவில் செ்ன். நீக்கிலார் ஆலயம் மற்றும் பாடசாலை ஆகியவற்றில் தஞ்சமடைந்த 1200 குடும்பங்களுக்கு யாழ். மறை வட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் ஒருவாரத்திற்கு உரிய உலர் உணவுப் பொருள்களை உடனடியாக வழங்கி உதவியது.

இராணுவ நடவடிக்கை தோல்வியடைந்து தத்தமது இடங்களுக்கு திரும்பி இருக்கும் மேற்படி மக்களின் இருப்பிடங்களை சிறிலங்கா படை எரியூட்டி அழித்திருப்பதை மீள அமைத்து வழங்கும் முயற்சியிலும் நிலையம் ஈடுபட்டு வருகிறது.

மேலும் மாதகல், இள

## மருத்துவத்துறைக்கான நோபல் பரிசு அறிவிப்பு

1993 ஆம் ஆண்டிற்கான மருத்துவத்துறை நோபல்பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. பிரிட்டனைச் சேர்ந்த ரிச்சேர்ட் ரொபர்ட் (50), அமெரிக்காவைச் சேர்ந்த பிலிப் சார்க் (49) எனும் இரு உயிரியல் விஞ்ஞானிகளும் மருத்துவத்துறைக்கான இவ்வாண்டு நோபல் பரிசை பெறுகின்றனர்.

மனித உடலில் உள்ள மரபணுக்கள் தொடர்ந்து வருவது இல்லை. அவை டி. என். ஏ. மூலக்கூறில் தனித்தனியாகவும் இருக்கலாம் என்ற கண்டுபிடிப்பிற்காக இவ் விருது வழங்கப்படுவதாக நோபல்பரிசுக்குழு அறிவித்துள்ளது

சென். யோசெப்

## அபிவிருத்திப் பணிகளுக்கு விசேட குழு நியமனம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்திப் பணிகளை கவனிப்பதற்கென அம்மாகாணத்தின் எம். பிக்கள், அரசாங்க அதிபர்கள், மாகாண சபை உயரதிகாரிகள் போன்றோரை உள்ளடக்கிய விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

'வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்திக்கான இணைப்புக் குழு' என்ற பெயரில் இக்குழு செயற்படும்.

இக்குழுவினர் புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூக நலத்துறை அமைச்சர் பி. தயாரத்ன தலைமையில் பாராளுமன்றக் கட்டடத்தில் கூடி வடக்கு கிழக்கில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி வேலைகள் குறித்து ஆராய்ந்தனர். வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் நளின் செனவிரத்னவும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்.

வட - கிழக்கு மாகாண அபிவிருத்திக்கான இணைப்புக் குழுவானது மாதமொரு தடவை கொழும்பில் கூடி வடக்கு கிழக்குஅபிவிருத்திப் பணிகள் குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும்.

## புத்தகக் கண்காட்சி

யாழ். மாநகரசபையினால் இவ் வாண்டிற்குரிய புத்தகங்களின் கண்காட்சி ஒன்று எதிர் வரும் 22ஆம், 23ஆம் திகதிகளில் யாழ். மாநகர சபையின் நூலகத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் இக் கண்காட்சியில் பல்துறைசார்ந்த பெருமளவு எண்ணிக்கையான புத்தகங்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

## 'ஆதாரம்' வெளிவந்துள்ளது

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சமூக பொருண்மியவிஞ்ஞான ஆய்வு இதழான 'ஆதாரம்' 10ஆவது இதழ் புரட்டாதி ஐப்பசிமாத வெளியீடாக புதுப் பொலிவுடன் விவசாய சிறப்பிதழாக வெளிவந்துள்ளது.

இந்த இதழானது ''தமிழீழ பொருண்மிய விவசாயத்தில் இன்றும் நாளையும்'' ''தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் நடவடிக்கைகளால் வளர்ச்சி பெற்றுவரும் விவசாயப் பொருண்மியம்'' எனும் சிறப்புக் கட்டுரைகளுடன் கம்புத் தானியம், சின்னக்கருவேலம், முத்தாமணக்கு சூரியகாந்தி கண்டல் காடுகள், பீடை கொல்லிகள், உழவு மாடு பழக்கும் திட்டம் புதிய இன பப்பாசி தொடர்பான விடயங்களுடன் கேணல் கிட்டு அவர்கள் தொடர்பான சிறப்புக் கவிதையும், ''எதிர் கொள்ளல்'', ''ஆச்சியின் மண்'' ஆகிய சிறுகதைகளையும் வாசகர்களுக்கான குறுக்கெழுத்துப் போட்டி ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக வெளிவந்துள்ளது.

### சைவசித்தாந்த வகுப்புக்கள்

எதிர்வரும தைமாதம் முதல் சைவசித்தாந்த வகுப்புக்களை யாழ் திருமறைக் கலா மன்றத்தினர் நடாத்தவுள்ளனர்.

மேற்படி மன்றத்தினரின் சைவசித்தாந்த ஆய்வு வட்டம் ஒழுங்கு செய்துள்ள இவ் வகுப்புக்களில் க. பொ. த உயர் தர மாணவர்கள் உட்பட ஏனைய ஆர்வலர்களும் கலந்து கொள்ள முடியும் எனவும், வகுப்புக்களில் கலந்துகொண்டு பயில விரும்புவோர் தமது விண்ணப்பங்களை திருமறைக் கலா மன்றத்திற்கு அனுப்பி வைக்குமாறு மன்றப்பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார். (41)

## முகத்துவாரம் முகாம் அகதிகள் நாவலடி முகாமிற்கு மாற்றம்

கொழும்பு முகத்துவாரம் அகதிமுகாமிலிருந்து தொடர்ந்தும் மட்டக்களப்பு நாவலடி அகதிமுகாமுக்கு கடந்த புதன் கிழமை அழைத்துவரப்பட்ட அகதிகளில் 50 பேர் வாழைச்சேனைப்பகுதியை வந்தடைந்தனர். எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி திடீரென வந்திறங்கிய இவ் அகதிகளுக்கு தேவையான வசதிகளைச்

மேற்படி அகதிகள்இதுபற்றி தெரிவிக்கையில் இங்கு வர விரும்பாத தாங்கள் நிர்ப்பந்தத்தினாலேயே கொழும்பு முகத்துவாரம் முகாமிலிருந்து அனுப்பப்பட்டோம். இரண்டாயிரம் ரூபா பணத்தைத் தந்து சிங்களப்படிவத்தில் ஒப்பமிட வைத்த சிங்கள அதிகாரிகள் மூகாமுக்கு எங்களை அனுப்பிவைத்தனர்.

எனக் கூறி நழுவி விட்டார்.

ஆனால், இது ஒரு ''ஜனநாயக பாரம்பரியத்திற்கு' முரணான செயல் என அப்பொழுதே விமர்சிக்கப்பட்டது. சபையில், பெரும்பான்மை பலம் உள்ளவர்களை ஆட்சி அமைக்குமாறு ஆளுநர்கள் அழைக்காமை ஆளுநர்களின் தவறான போக்கைக் காட்டுவதாகவும், அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் ஏஜென்டுகளாகச் செயற்படுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டது.

இவ்வாறாக, ஆளுநர்களும், ஐக்கிய தேசியக் கட்சியினரும் 'ஜனநாயகப் பாரம்பரியம்' என்றால் என்ன? என்ற நிலையை உருவாக்கினர். ஐ. தே. கட்சியைப்பொறுத்துமேல் மகாணம் உட்பட மூன்று மாகாணங்களையும் இழப்பதென்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதொன்றல்ல. ஏனெனில், இலங்கையில் உள்ள 96 லட்சம் வாக்காளர்களில் 56 லட்சம் வாக்காளர்கள் - சுமார் 58 வீதம் - இம் மூன்று மாகாணத்திலுமே உள்ளனர். ஆகையினால், இம்மாகாணங்கள் எதிர்கால தேர்தல்களில் கணிசமான தாக்கத்தை விளைவிக்கக் கூடும். அத்தோடு, இம் மூன்று மாகாணங்களுமே சிங்களவர் அதிகம் செறிந்து வாழும் மாகாணங்களும்' ஆகும்.

இத்தீர்ப்பானது ஐ. தே. கட்சிக்குப் பலத்த அவமானத்தை ஏற்படுத்தியுள்ளதோடு, பெரும் அரசியல் நெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையையும் உருவாக்கியுள்ளது. இதேவேளை, ஆளுநர்களின் பதவிகள் குறித்த சர்ச்சையையும் கிளப்பியுள்ளது.

ஆளுநர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்களாக இருப்பினும், அப்பதவி கிட்டிய பின்னர், அவர்கள் நீதிபதிகள் போன்று நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் அவ்வாறு நடந்து கொள்வதாக இல்லை. இவர்களின் நடத்தை சிறிலங்காவின் கிரிக்கெட் மத்தியஸ்தர்களை ஞாபகப்படுத்துவதாக உள்ளது. அத்தோடு, மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்த பின்னரும் தென் மாகாண முதலமைச்சராக பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினர் அமரசிறி தொடங்கொட பதவி ஏற்க முற்பட்டபோது அதை ஆளுநர் தடுக்க முனைவது வெட்கக்கேடான செயல். இதேவேளை, ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் பணிப்புரையின் பேரிலேயே இச் சத்தியப் பிரமாணம் ஒத்திப் போடப்பட்டிருக்கிறது என ஆளுநர் தெரிவித்தமை, டி. பி. விஜேதுங்காவின் கபடத்தனத்தைக் காட்டுவதாகவுள்ளது.

சிறிலங்கா அரசியல்வாதிகள் தங்கள் நாட்டு 'ஜனநாயக பாரம்பரியத்தை' அடிக்கடி பெருமையாகப் பேசிக் கொள்வதுண்டு. அதிலும், குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் 'ஜனநாயகம்' பற்றி பெரியளவில் பேசிக் கொள்வதுண்டு. ஆனால், அவர்களின் ஜனநாயக விரோதச் செயல்கள் இன்று நீதிமன்றம் அரசாங்கத்திற்கு எதிராகத் தீர்ப்புக் கூறும் நிலைக்கு கொண்டு வந்துள்ளது.

ஆனால், இது முதல் சம்பவம் அல்ல. இதனை முதலில் தென்னிலங்கையில்தான் ஐக்கிய தேசியக் கட்சி பரீட்சித்துப் பார்த்தது என்பதும் இல்லை. இவற்றிற்கான பரீட்சைக் களங்களாக முதலில் வடக்கு கிழக்கு மாகாணங்களே இருந்தன. மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலே இதற்கான முதற் பரீட்சைக் களமாகும். ஆனால், அன்று தேர்தல் முடிவில் யாழ். நகரையும், நூல்நிலையத்தையும் சிங்களப் பொலிஸார் தீயிட்டனர். ஆனால், அது குறித்து அன்றைய எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி கண்டுகொள்ளவில்லை. ஆனால், இன்று ஆளுநர் மாளிகையின் முன் இரு சுதந்திரக் கட்சிக்காரர்கள் சிங்களப் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால், இதுகுறித்து சிறிலங்கா சுதந்திரக்கட்சி பலத்த கண்டனம் தெரிவிக்கும் ஆயினும், ஐக்கிய தேசியக் கட்சி இதனைப் பொருட்படுத்தாத தூரத்திற்கு எப்போதோ சென்று விட்டது.

---

பொன்சேகா முற்பட்டார். ஆனாலும் சாட்சியமாக எவரையும் அழைத்துச் செல்லலாம் எனக் கூறிய ஒழுங்கு நடவடிக்கைக் குழு சட்டத்தரணி ஒருவர் விசாரணையில்

---

## ஒருவார உலர் உணவு

(குருநகர்)

சிறிலங்கா இராணுவத்தினர் கடந்த மாத இறுதியில் மேற்கொண்ட யாழ்தேவி இராணுவ நடவடிக்கைகளால் தென்மராட்சிப் பகுதியில் இடம்பெயர்ந்து மிருசுவில் சென். நீக்கிலஸ் ஆலயம் மற்றும் பாடசாலை ஆகியவற்றில் தஞ்சமடைந்த 1200 குடும்பங்களுக்கு யாழ். மறை வட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் ஒருவாரத்திற்கு உரிய உலர் உணவுப் பொருள்களை உடனடியாக வழங்கி உதவியது.

இராணுவ நடவடிக்கை தோல்வியடைந்து தத்தமது இடங்களுக்கு திரும்பி இருக்கும் மேற்படி மக்களின் இருப்பிடங்களை சிறிலங்கா படை எரியூட்டி அழித்திருப்பதை மீள அமைத்து வழங்கும் முயற்சியிலும் நிலையம் ஈடுபட்டு வருகிறது.

## மருத்துவத்துறைக்கான நோபல் பரிசு அறிவிப்பு

1993 ஆம் ஆண்டிற்கான மருத்துவத்துறை நோபல்பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. பிரிட்டனைச் சேர்ந்த ரிச்சேர்ட் ரொபர்ட் (50), அமெரிக்காவைச் சேர்ந்த பிலிப் சார்க் (49) எனும் இரு உயிரியல் விஞ்ஞானிகளும் மருத்துவத் துறைக்கான இவ்வாண்டு நோபல் பரிசை பெறுகின்றனர்.

மனித உடலில் உள்ள மரபணுக்கள் தொடர்ந்து வருவது இல்லை. அவை டி. என். ஏ. மூலக்கூறில் தனித்தனியாகவும் இருக்கலாம் என்ற கண்டுபிடிப்பிற்கான இவ்விருது வழங்கப்படுவதாக நோபல்பரிசுக்குழு அறிவித்துள்ளது

## இறுதியாட்டங்கள்

அரியாலை சிற்றம்பலம் விளையாட்டுக் கழகம் நடத்தும் விளையாட்டுப் போட்டிகளின் இறுதியாட்டங்களும், பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகலில் கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன. நொதேண் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மஞ்சவனப்பதி விளையாட்டுக் கழகம், பிற்பகல் 4.00 மணியளவில் துடுப்பெடுத்தாடும். அதைத்தொடர்ந்து 6.30 மணியளவில், சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழக பெண்கள் அணியை எதிர்த்து நாயன்மார்க்கட்டு பாரதி விளையாட்டுக் கழக அணி மோதும். கரபந்தாட்டம் காட்சிப்போட்டியாக இடம் பெறும். மேலும் கரபந்து சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் மாலை 7.30 க்கு ஆவரங்கால் ம. வி. க வை எதிர்த்து கே. கே. எஸ். ஐ. வி. க அணி விளையாடும். இதைத் தொடர்ந்து பரிசளிப்பு விழாவும் இடம் பெறவுள்ளது.

## சென். யோசெப் சம்பியனாகியது

[குருநகர்]

யாழ். கோட்ட கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் 15 வயதுக்குட்பட்டவர்கள் பிரிவில் யாழ். சென். யோசெப் வித்தியாலயம் 'எ' குழு சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தை 3-0 என்றகோல் அடிப்படையிலும் யாழ் இந்துக்கல்லூரியை 1-0 என்ற கோல் அடிப்படையிலும்- நாவாந்துறை றோ. க. பாடசாலையை 1-0 என்ற கோல் அடிப்படையிலும் சென். ஜோசெப் வித்தியாலயம் வெற்றிகளை ஈட்டி 'எ' குழுவில் சம்பியனாகத் தெரிவானது, அதேவேளை தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் 17வயது பிரிவிலும் சென் யோசெப் வித்தியாலயம் கொக்குவில் இந்துவுக்கு எதிராக 2-0 கோல்களைப் போட்டு வெற்றி பெற்றுள்ளது, (21)

மேலும் மாதகல், இளவாலை, சில்லாலை, பண்டத்தரிப்பு பகுதிகளில் இருந்து மானிப்பாய் பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ள மாணவ-மாணவிகள் கல்வி கற்பதற்கான பாரிய மண்டபக் கொட்டில்களை நிறுவ 3லட்சத்து 80 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளது

பாரிய நான்கு கொட்டகைகளும் எதிர்வரும் 94ஆம் ஆண்டு ஜனவரிக்குள் நிறுவப்பட்டு விடுமென நிலைய இயக்குநர் வண. எஸ். ஹில்லறி ஜெபநேசன் அடிகளார் தெரிவித்துள்ளார். (21)

## குளோறின் விசிறல்

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேச சபைஎல்லைக்குட்பட்ட குடிநீர்க்கிணறுகளுக்கு குளோறின் மருந்து போடப்பட்டு வருகின்றன

தற்போது நாட்டில் நிலவும் நெருக்கடியான சூழ்நிலையில் தொற்றுநோய்கள் பரவாவண்ணம்தடுப்பதற்கான முன் நடவடிக்கையாகவே இவை போடப்படுகின்றன.

# நீதவானின் தீர்ப்பை எதிர்த்து சட்டமா அதிபர் மேன்முறையீடு

(கொழும்பு)

அமைச்சரின் மெய்ப்பாதுகாவலர்களுக்கு எதிராக விதிக்கப்பட்ட தண்டனை போதாது எனவும், ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனைக்குப் பதிலாக சிறைத் தண்டனை விதிக்கப்படவேண்டுமெனவும் சட்டமா அதிபர் மேன்முறையீடு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

அமைச்சர் மேர்வின் ஜே. குரேயின் மெய்ப்பாதுகாவலர்களாகக் கடமையாற்றிய இரு பொலிசார், வாகன சாரதி, மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகியோருக்கு எதிராக அவிசாவல நீதிமன்றத்தில் நீதவான் விதித்த தீர்ப்பை எதிர்த்து சட்டமா அதிபர் மேன்முறையீடு செய்துள்ளார்.

1990 ஜூன் 20ஆம் திகதியன்று நண்பகலில் அவிசாவல பகுதியிலுள்ள மட்டகொடவில் பாடசாலை ஆசிரியர்களின் சம்பளப் பணம், மற்றும் மாணவர் உணவுமுத்திரைக்கான பணமான 58,400 ரூபாவை துப்பாக்கி முனையில் கொள்ளையிட்டதாக இவ்வழக்கில் எதிரிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இவ்வழக்கில் எதிரிகளுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும், வழக்குச் செலவாக ஒவ்வொருவரும் தலா 2,500 ரூபாவும் செலுத்த வேண்டுமெனவும் நீதவான் தீர்ப்பளித்து இருந்தார். இத்தீர்ப்பை எதிர்த்தே சட்டமா அதிபர் மேன்முறையீடு செய்துள்ளார்.

---

கொள்ள முடியும் எனவும், வகுப்புக்களில் கலந்துகொண்டு பயில விரும்புவோர் தமது விண்ணப்பங்களை திருமறைக் கலா மன்றத்திற்கு அனுப்பி வைக்குமாறு மன்றப்பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார். (41)

பான விடயங்களுடன் கேணல் கிட்டு அவர்கள் தொடர்பான சிறப்புக் கவிதையும், ''எதிர் கொள்ளல்'', ''ஆச்சியின் மண்'' ஆகிய சிறுகதைகளையும் வாசகர்களுக்கான குறுக்கெழுத்துப் போட்டி ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக வெளிவந்துள்ளது.

## முகத்துவாரம் முகாம் அகதிகள் நாவலடி முகாமிற்கு மாற்றம்

கொழும்பு முகத்துவாரம் அகதிமுகாமிலிருந்து தொடர்ந்தும் மட்டக்களப்பு நாவலடி அகதிமுகாமுக்கு கடந்த புதன் கிழமை அழைத்துவரப்பட்ட அகதிகளில் 50 பேர் வாழைச்சேனைப்பகுதியை வந்தடைந்தனர். எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி திடீரென வந்திறங்கிய இவ் அகதிகளுக்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க அதிகாரிகள் பெரும் சிரமங்களுக்குள்ளாகினர்.

வாழைச்சேனை அகதி முகாமில் இடநெருக்கடிகாரணமாக இவ் அகதிகள் பேசாலை விபுலானந்தர் வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டதுடன் இரவு உணவும் ஒழுங்குசெய்து கொடுக்கப்பட்டது.

மேற்படி அகதிகள்இதுபற்றி தெரிவிக்கையில் இங்கு வர விரும்பாத தாங்கள் நிர்ப்பந்தத்தினாலேயே கொழும்பு முகத்துவாரம் முகாமிலிருந்து அனுப்பப்பட்டோம். இரண்டாயிரம் ரூபா பணத்தைத் தந்து சிங்களப்படிவத்தில் ஒப்பமிடவைத்த சிங்கள அதிகாரிகள் முகாமுக்கு எங்களை அனுப்பிவைத்தனர்.

எமது சொந்த இடங்களான புணானை மயிலந்தனை போன்ற இடங்களுக்கு போய் எப்படி நாம் வாழமுடியும்? மீண்டும் அகதி முகாமில் தானே வாழவேண்டியுள்ளது. எந்தவொரு தொழிலும் செய்யமுடியாத இந்தப்பகுதியிலிருந்து கொண்டு நாம் எமது தேவைகளை எவ்வாறு நிறைவு செய்து கொள்வது?

மட்டக்களப்பிலிருந்து ஒரு அதிகாரியும் உடன்வராமல் எம்மை தனியாக ஒரு லொறியில் ஏற்றி அனுப்பினார்கள். பிள்ளைகள், வயோதிபர்கள், நோயாளர் ஆகியோருடன் நாம் படாதபாடுபட்டு இங்கு வந்து சேர்ந்தோம் ஒரு பஸ்ஸிலாவது எம்மை ஏற்றி அனுப்பியிருக்கலாம்.

இது பற்றி மட்டக்களப்பில் உள்ள ஓர் அதிகாரியிடம் நாம் கேட்டபோது விரும்பினால் இந்த லொறியில் போகலாம் இல்லாவிட்டால் இறங்கி நிற்கலாம் இதை விட என்னால் எதுவும்செய்ய முடியாது என்றார்.

அகதிகளான எங்களுக்கு வேதனைகளும், சோதனைகளும் தான் சொந்தமாகிவிட்டன எனக் கூறினார்கள்.

### எல்லை

கிராம பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாம்.

இதேவேளை வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட பல படகுகளில் 20க்கு மேற்பட்ட விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் திருக்கோணமலைக்குச் சென்றுள்ளதாக கிடைத்துள்ள தகவல்களையடுத்து திருக்கோணமலையிலும் படையினர் உசார்படுத்தப்பட்டுள்ளனராம்.

மேலும் கொழும்பில் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்பதால் முப்படைகளும் ஒன்றிணைந்து பாதுகாப்பு வழங்க திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### ஜனாதிபதி

திற்குள் எதுவும் நடைபெறலாம். அது குறித்து என்னால் இப்போது எதுவும் கூற முடியாது எனவும் அப் பேட்டியில் சிறிசேனகூரே மேலும் தெரிவித்தார்.

### பொலிஸ்

நிலையங்களையே புலிகளின் இந்த விசேட படையணிகள் தாக்க உள்ளதாகவும் இதனையடுத்து அப்பகுதியிலுள்ள பொலிசார் உசார்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

### மிதிவெடி

கரையோரப் பகுதிகளைப் பரீட்சித்து மிதிவெடிகளை அகற்றும் பணியில் இவர்கள் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர். (86)

### கொலரா

சந்தேகிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டது எனவும் 22 பேருக்கு கொலராநோய் இருப்பது தெரியவந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இப்பகுதியில் ஒருவர் பலியாகியுள்ளார். சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் சிகிச்சை வழங்கப்பட்ட 54 பேரில் 5பேர் கொலரா நோயாளிகள் எனவும் ஒருவர் இறந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. மானிப்பாய் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்ட 31 பேரில் 8 பேர் நோய்க்கு உள்ளாகியிருந்தனர் இருவர் பலியாகினர் மேலும் கோப்பாய் பிரிவில் 4 பேரும் தெல்லிப்பழைப் பிரிவில் 4 பேரும் இந்நோய்க்கு உள்ளாகியிருந்ததாக தெரிவிக்கப்பட்டது. (சி)

எங்களால் மட்டுமே
இது முடியும்!

PAPER CLASS

ஆரம்பம்
14-10-93

பெயர்களை முன்கூட்டியே
பதிவு செய்து கொள்ளுங்கள்.

யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(சி-7586)



## கணக்காய்வாளர்கள் தேவை

(வன்னிப் பிராந்திய பொது நிர்வாக அலுவலகம்)

வன்னிப் பிராந்தியத்தில் கணக்காய்வு செய்யக் கணக்காய்வாளர்கள் தேவைப்படுகின்றனர்

கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர்களுக்கும், கூட்டுறவுத் துறையில் பணியாற்றிய அனுபவம் உடையவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

வயதெல்லை இல்லை. தங்குமிட வசதியும், போக்குவரத்து வசதியும் அளிக்கப்படும்.

நேரில் பேசி, சம்பளம் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-

**யாழ். வட்டச் செயலகம்**

(ராஜா டீசல் இஞ்ஜினியேர்ஸ்க்கு அருகாமையில்)

**மருத்தித்துறை வீதி,**

**யாழ்ப்பாணம்.**

(சி-7579)



அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

## தமிழ் தட்டெழுத்தாளர் பதவி வெற்றிடம்

மேல் குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

பதவி:- தமிழ் தட்டெழுத்தாளர்
குறி இல 305: 13

சம்பளத் திட்டம்:- 730/- 1055/-


## நவராத்திரி தினம்

ஊரெழு - சக்திபுரம் சிவபூரணி காளியம்மன் தேவஸ்தானத்தில் எதிர்வரும் நவம்பர் 16 ஆம் திகதி நவராத்திரி தினம் நடைபெறும். மாலை 3. 30 முதல் 6. 00 மணிவரை தினமும் நவராத்திரி விழா இடம் பெறும்.

இறுதி நாளான விஜயதசமியன்று இரவு 7. 00 மணிக்கு அறநெறி பாடசாலையின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவும் கலைவிழாவும் நடைபெறும்.

## மேசைப்பந்து போட்டி

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு விழாப் போட்டிகளில் யாழ்ப்பாணக் கோட்ட மாணவர்களுக்கான மேசைப் பந்துப் போட்டி இன்று காலை 8 00 மணிக்கு வை.எம்.சி.எ. கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

## கலை விழா

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் கலைவிழா ஒன்று நாளை 1.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

## புள்ளி மதிப்பீடே இன்று ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

நேற்றைய ஈழநாதம் தினசரியில் வெளிவந்த முன்னோடிப் பரீட்சை இன்று ஆரம்பமாகவுள்ளது என்பது தவறு.

இன்று அப் பரீட்சைக்கான புள்ளிமதிப்பீடே ஆரம்பமாகவுள்ளது என்பதே சரியானதென வாசகர்களின் கவனத்திற்குகொண்டுவருகின்றோம்.

## தொழுநோய் ஆய்வு

[தொல்புரம்]

வடபிராந்திய சுகாதாரப் பகுதியினரால் நடத்தப்பட்ட தொழுநோய் ஆய்வின் போது சில நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

சுகாதாரப் பகுதி தொழுநோய் கட்டுப்பாட்டு குழுவினரின் ஆய்வின் போது சுழிபுரம் குடாக்கனைப் பகுதியில் இருவரும், உரும்பராய் செல்வபுரம் பகுதியில் இருவருமாக மொத்தம் நான்கு தொழுநோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது. (41)

## கரும்புலிகள் அரங்க போட்டி பரிசு பெறுவோர் விபரம்

**மரபுவழி நாடகம்**

1-வது இடம்-தியாகத்தாய்-பாசையூர் கலைஞர்கள்.

2-வது இடம் - வெற்றியின் வெளிச்சம் - வடமராட்சி.

3-வது இடம் - புயலில் ஓர் மலர் - தீவகம்.

சிறந்த அரங்கு-வெற்றியின் வெளிச்சம், சிறந்த எழுத்துரு-வெற்றியின் வெளிச்சம், சிறந்த இசை-வெற்றியின் வெளிச்சம், சிறந்தஒப்பனை-தியாகத்தாய், சிறந்த நெறியாள்கை-தியாகத்தாய்.

**இயல்பு நெறி நாடகம்**

1-வது இடம்-உயிர்த்தெழுவோம் - வடமராட்சி

2-வது இடம்-ஒருபிடி மண்-வலிகாமம்.

3 வது இடம் - மண்ணின் மைந்தர்கள் - தென்மராட்சி.

சிறந்த அரங்கு-உயிர்த்தெழுவோம், சிறந்த எழுத்துரு-உயிர்த்தெழுவோம், சிறந்த இசை - ஒருபிடி மண், சிறந்த ஒப்பனை உயிர்த்தெழுவோம், சிறந்த நடிகர்-மேகலை (குடிகாரான் தந்தை), சிறந்த நடிகை - ஒருபிடி மண் (செல்லம்மா)

**குறியீட்டு நாடகம்**

1-வது இடம் - இனியொரு விதி செய்வோம் - வலிகாமம்.

2-வது இடம்-கல்லாய் மனிதராய் - வலிகாமம்.

2-வது இடம் தரும உபதேசம் - தென்மராட்சி.

3-வது இடம்-தாகம் தென்மராட்சி.

சிறந்த அரங்கு-இனியொரு விதி செய்வோம், சிறந்த நெறியாள்கை கல்லாய் மனிதராய், சிறந்த எழுத்துரு-தரும உபதேசம், சிறந்த இசை-தாகம், சிறந்த ஒப்பனை இனியொரு விதி செய்வோம், சிறந்த நடிகை-கிருஸ்ணவேணி (விலங்குகள்), சிறந்த நடிகர்-சந்திரகுலசிங்கம் (இனியொரு விதி செய்வோம்)

**கும்மி**

1-வது இடம் சிவசக்தி நர்த்தனாலயம்-மீசாலை, தென்மராட்சி.

2 வது இடம்-மகளிர் கல்லூரி - சாவகச்சேரி - தென்மராட்சி.

3-வது இடம் நாட்டிய கலாலயம் - மீசாலை - தென்மராட்சி.

**கரகம்**

1-வது இடம் - செல்வன் ராஜபேட் - சுதுமலை -வலிகாமம்.

2-வது இடம்-தேவஜீவா நாட்டியகலாமன்றம் - சுன்னாகம், வலிகாமம்.

3-வது இடம் - அம்பாள் விளையாட்டுக்கழகம் தீவகம்.

**கோலாட்டம்**

1-வது இடம் திலகா நர்த்தனாலயம் தென்மராட்சி.

2 வது இடம்-ராஜினி உரும்பராய்-வலிகாமம்

3-வது இடம்-புகையிரத முகாம்-தீவகம்.

**காவடி**

1-வது இடம் - ராஜினி, உரும்பராய் வலிகாமம்.

2 வது-இடம்-புகையிரத முகாம் தீவகம்.

3-வது இடம் -மங்கையர்க்கரசி-வடமராட்சி.

**போர்த்தேங்காய்**

1-வது இடம்-க. குணசேகரம்-அலிஸ்ரன் ச. ச. நி - உடுவில்.

2-வது இடம்-செ. குணசேகரம்-சுதுமலை.

3-வது இடம்-சி. சிகாமணி-அலிஸ்ரன் ச. ச. நி-உடுவில்

## பங்குத்தரகர் மேத்தாவின் புகார் விசாரணை கைவிடப்பட்டது

### சி. பி. ஐ தெரிவிப்பு

(டில்லி)

பங்குச் சந்தை தரகர் ஹர்சத் மேத்தா பிரதமர் பி.வி. நரசிம்மராவுக்கு ஒரு கோடி ரூபாய் கொடுத்ததாக வெளிவந்த குற்றச்சாட்டு தொடர்பான விசாரணையை சி. பி. ஐ கைவிட்டு விட்டதாக கூட்டுப் பாராளுமன்றக் குழுவின் முன்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணையின்போது இக்குற்றச்சாட்டு தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கக்கூடிய முன்நிபந்தனை எதுவும் நிறைவேற்றப்படவில்லை என்றும் ஹர்சத் மேத்தாவின் புகார் சட்ட ரீதியாக தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லக்கூடியதொன்றல்ல என்றும் மத்திய புலனாய்வுக் கழக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## லெப். கேணல்விக்ரர் நினைவு நானாட்டானில் நிகழ்ச்சிகள்

லெப்டினன்ட் கேணல் விக்ரர் உட்பட பத்தாம் மாதத் ...

... படங்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து நானாட்டான் ...


**COMPUTER கல்வி**

Diploma in Computer Programming

BASIC LANGUAGE

4 MONTHS சனி, ஞாயிறு வகுப்புக்கள்

ஆரம்பம்: 17. 10. 1993
8. 30 மணி

C. I. M. A., I. A. B., Lotus 1-2-3
SHORT - HAND & TYPING
நடைபெறுகின்றன.

Lectures by: S. P. SIVAPATHASUNDARAM
M. I. D. P.M. (Lond)

FEES: மாதம் ரூபா 400/- மட்டுமே

மேலும் விபரங்களுக்கு:

**School of Business Administration**

(Pioneers in Computer Education)

16, 3rd CROSS STREET, JAFFNA.

(சி-7594)



கோப்பாய்

## கிறிஸ்தவக் கல்லூரி கலை விழா

புரட்டாதி மாதம் நடைபெறுவதாக இருந்த கலை விழா எதிர்வரும் 15 10-1993 வெள்ளிக்கிழமை கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

மாணவர்களுக்கு - பி. பகல் 1 30 மணிக்கும்,
வெளியார்களுக்கு - பி. பகல் 3-30 மணிக்கும்.
அனைவரும் கலந்துகொள்ளவும்.

அதிபர்.

(6280)



## ஹென்றி டுனாட் ஞாபகார்த்த விழா

ஒக்டோபர் 16, 17

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வலிவடக்கு பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட மேற்படி விழா, கால நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதனை மனவருத்தத்துடன் தெரியப்படுத்துவதுடன் இதனையொட்டிய ஒத்துழைப்பு தந்தோருக்கு நன்றி கூறுகின்றோம்.

க. அருந்தவராஜா
தலைவர்

(6279)


காரைநகர்

(சி-7579)

### அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையுள்ளது)

## தமிழ் தட்டெழுத்தாளர் பதவி வெற்றிடம்

மேல் குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

**பதவி:-** தமிழ் தட்டெழுத்தாளர் குறி இல 305: 13

**சம்பளத் திட்டம்:-** 730/- 1055/- 20 × 10 : 25 × 5

இத்துடன் சங்கத்தினால் வழங்கப்படும் சகல அலவன்சுகளும் வழங்கப்படும்.

**தகைமை:-**

க. பொ த (சாதாரண தரத்தில்) சம்பந்தப்பட்ட மொழியினை உள்ளடக்கியதாக ஆறு பாடங்களிலான சித்தியும், தமிழ் தட்டெழுத்தாற்றல் நிமிடத்திற்கு 20சொற்களுக்கு குறையாமலும்

**வயது:-**

விண்ணப்ப முடிவுத் திகதியில் 21 வயதுக்கு குறையாமலும், 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 28 - 10 - 93**

சங்கத் தொழிற் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

ரூபா 5/- செலுத்தி விண்ணப்பப் படிவங்களை வேலை நாட்களில் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

**பொது முகாமையாளர்**

அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கம்,
மருதனார்மடம் - உரும்பராய் வீதி,
இணுவில்.
12-10 93

(சி 7595)

## ஆய்வு

[தொல்புரம்]

வடபிராந்திய சுகாதாரப் பகுதியினரால் நடத்தப்பட்ட தொழுநோய் ஆய்வின் போது சில நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

சுகாதாரப் பகுதி தொழுநோய் கட்டுப்பாட்டு குழுவினரின் ஆய்வின் போது சுழிபுரம் குடாக்கனைப் பகுதியில் இருவரும், உரும்பராய் செல்வபுரம் பகுதியில் இருவருமாக மொத்தம் நான்கு தொழுநோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் எனத் தெரிய வருகின்றது. (41)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
இலங்கை
பட்டப்பின டிப்ளோமா
பொது நிர்வாகம்
1ஆம் அரையாண்டுப் பரீட்சை 993

1993 - 10 - 11 ஆரம்பமாகவிருந்த மேற்படி பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது. திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

இரண்டாம் அரையாண்டிற்கான விரிவுரைகள் 1993-10-20 அன்று ஆரம்பமாகும்.

பதிவாளர்.
(சி-7598)

## விசாரணை கைவிடப்பட்டது
### சி. பி. ஐ தெரிவிப்பு

(டில்லி)

பங்குச் சந்தை தரகர் ஹர்சத் மேத்தா பிரதமர் பி.வி. நரசிம்மராவுக்கு ஒரு கோடி ரூபாய் கொடுத்ததாக வெளிவந்த குற்றச்சாட்டு தொடர்பான விசாரணையை சி.பி.ஐ கைவிட்டு விட்டதாக கூட்டுப் பாராளுமன்றக் குழுவின் முன்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணையின்போது இக்குற்றச்சாட்டு தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கக்கூடிய முன்நிபந்தனை எதுவும் நிறைவேற்றப் படவில்லை என்றும் ஹர்சத் மேத்தாவின் புகார் சட்டரீதியாக தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லக்கூடியதொன்றல்ல என்றும் மத்திய புலனாய்வுக் கழக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## லெப். கேணல்விக்ரர் நினைவு நானாட்டானில் நிகழ்ச்சிகள்

லெப்டினன்ட் கேணல் விக்ரர் உட்பட பத்தாம் மாதத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்களை நினைவு கூருமுகமாக மன்னார், நானாட்டான் வட்டத்திலுள்ள ஆத்திக் குழிக் கிராமத்தில் வீரவணக்கக் கூட்டமும் விளையாட்டுகளும் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

நேற்று முன் தினம் இடம் பெற்ற இந்நிகழ்வுகளின் போது அடம்பனில் இடம் பெற்ற வரலாற்றுச் சமரின் போது வீரச்சாவடைந்த லெப்டினன்ட் கேணல் விக்ரர் 2-ம் லெப்டினன்ட் றோம் மற்றும் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிக்கப்பட்டனர்.

தமிழீழத்தேசியக் கொடியை மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. நந்தகுமார் ஏற்றிவைத்ததை தொடர்ந்து பிரதேச மட்டத்திலான கரபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகியன இடம்பெற்றன.

மாலை 6 30 மணியளவில் மாவீரர்களின் பெற்றோர் பான்ட்வாத்திய இசையுடன் அழைத்துவரப்பட்டனர். பிரதான ஈகைச்சுடரினை மாவட்டத் தளபதி திரு. கதிர் அவர்கள் ஏற்றி வைக்க மாவீரர்களின் பெற்றோரும் தமது பிள்ளைகளின் உருவப் படங்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து நானாட்டான் வட்ட கலை பண்பாட்டுக்கழக இணைப்பாளர் திரு. தேவதாஸ் தலைமையில் வீரவணக்கக் கூட்டம் இடம்பெற்றது. இதில் மாவட்டஅரசியல்துறை துணைப்பொறுப்பாளர் திரு. நந்தகுமார், வன்னிப்பகுதி கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு.நாவண்ணன், மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. கணேஸ் ஆகியோர் உரை நிகழ்த்தினர். இதனைத் தொடர்ந்து பரிசளிப்புவிழாவும் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

**வடபகுதி**

...கள் தொடர்பாக தாம் அறிந்து கொண்டவற்றைக் கொண்டு இவ் விஜயத்தின் முடிவில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

குறிப்பாக வடபகுதியில் சீர்குலைந்திருக்கும் வங்கி சேவை தொடர்பாக கருத்து வெளியிடும் போதே இருண்ட கண்டம் தென்னாபிரிக்கா அல்ல யாழ்ப்பாணத்தின் வங்கி சேவையே இருண்ட கண்டமாக காட்சி தருவதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.(க)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
## 13-10-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11199

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்!
இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
26-7540, 41-8031, 41-9759, 25 3033, 24 5127
24 2496, 41-5583, 27-9959, 26-0987.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993 ஆண்டு ஒக்டோபர் மாதம் 14 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வெளியார்களுக்கு - பி. பகல் 3-30 மணிக்கும்.
அனைவரும் கலந்துகொள்ளவும்.

(6280) அதிபர்.

## ஹென்றி டுனாட் ஞாபகார்த்த விழா
### ஒக்டோபர் 16, 17

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வலிவடக்கு பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட மேற்படி விழா, கால நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதனை மனவருத்தத்துடன் தெரியப்படுத்துவதுடன் இதனை யொட்டிய ஒத்துழைப்பு தந்தோருக்கு நன்றி கூறுகின்றோம்.

க. அருந்தவராஜா
தலைவர்

(6279)

### காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையுள்ளது)
374, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்

## முக்கிய அறிவித்தல்
### கிளைக்குழுத் தேர்தலுக்குப் பின்னர் நடைபெறும் முதலாவது பொதுச்சபைக் கூட்டம்

மேற்படி கூட்டம் சங்கத் தலைவர் திரு. கா. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் 25-10-93 திங்கட்கிழமை முற்பகல் 9-00 மணிக்கு பண்ணாகம் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெறும். பொதுச் சபை பிரதிநிதிகளால் தரப்பட்ட முகவரிக்கு நிகழ்ச்சி நிரல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நிகழ்ச்சி நிரல் கிடைக்கப் பெறாத பொதுச் சபை பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் உள்ள சங்கத் தலைமைக் காரியாலயத்தில் நிகழ்ச்சி நிரல் கடிதத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

க. ... ராசா
செயலாளர்

13-10-93

(சி/7599)

## மரண அறிவித்தல்
### திரு. சுந்தரம் பசுபதி

முன்னாள் ''லஷ்மி'' மரக்காலை உரிமையாளர் (ஆனைப்பந்தி), இல. 28 அத்தியடியை சேர்ந்தவருமான இவர் (9-10-93) இல் கனடாவில் சிவபதம் எய்திவிட்டார் இவர் அன்னலட்சுமியின் அன்புக்கணவரும், வே. ராசதுரையின் அருமைமருமகனும், மகேந்திரன் (கனடா), யசோதராதேவி, ரதி, விஜேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், த விஸ்வநாதன் (மட்டக்களப்பு தொலைத் தந்தி), பேரின்பநாதன் (ஜேர்மனி) ஆகியோரின்மாமனாரும் ஆவார். இத்தகவலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும் என்பதை அறியத் தருகின்றேன்.

தகவல்:
சகோதரன்
சு. மார்க்கண்டு

358, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

[6277]

## பலவகைப் பொருள்களில் மலிவு விற்பனை

- ★ குறைந்த விலையில் பொருள்கள் வாங்கிட
- ★ புதுமை முறையில் அன்பளிப்புகள் வழங்கிட
- ★ மாதாந்தம் பரிசுகள் பெற்றிட
- ★ பெண்கள் சிறுவர்க்கான தையல் செய்திட
- ★ வெளிநாட்டு நாணயங்கள் மாற்றிட

**எழிலகம்** மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி-7593)